முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1197

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

08.01.2023, ஞாயிற்றுக்கிழமை

1. அறமெனும் சக்தியே ஞான தேசிகா
ஆற்றல்மிக்க மாதவசியாய் வந்த அரங்கராஜா
வரம்தந்து ஆறுமுகன் யான் உன்னுள்ளே
வையகத்தில் ஆற்றலாக அவதாரம் உன்வழி புரிந்திருக்க
2. இருக்கவே அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
இயம்பிடுவேன் சுபகிருது சிலை திங்கள் தன்னில்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 24 ம் நாள் 08.01.2023, ஞாயிற்றுக்கிழமை)
கருத்தாக அரங்கன் உன்வழி தொண்டர் படை பெருக
கலியுகத்தில் மாற்றம் சடுதி உண்டு உண்டு
3. உண்டான உன்தர்மத்தை உலகம் ஏற்க
உலகமெங்கும் தர்மலோக மாற்றம்
இலகுவாக நடந்தேறி இந்த பேருலகம்
இனிதே பாதுகாப்பும் சர்வபலமும் காணக்கூடும்
4. கூடவே அரங்கன் சன்மார்க்கம்
குவலயத்தை ஆளும் நிலையாக
இன்பமுற அன்பர்களிடை ஜீவதயவு பெருகி இனிதே
இந்த பேருலகம் மாற்றங்காணும்
5. காணவே அரங்கனை தேர்வுசெய்து
கலியுகத்தில் கந்தவேலன் யான்
ஞானமாக உலகிற்கு பரவிவர
நம்பிக்கைவைத்து அரங்கன்வழி வரும் மக்கள்படை மூலம்தான்
6. மூலமாகத்தான் இந்த உலகமாற்றம்
முழுமைகொண்ட ஞானலோக மாற்றமாக
காலமதும் சடுதி கனிந்து
கலியுகத்தில் ஞான ஆட்சி மலரும்
7. மலரவே அரங்கன் திருவடியே
மக்களை மீட்கும் ஞானத்திருவடியாகும்
கோலமதாய் உலகோர் ஓங்காரக்குடில் நோக்கி
குறையிலா வலம்வந்து குவலயத்தில் அரங்கன் ஆசிபெற
8. ஞாலமதில் சடுதி இந்த மாற்றம்
நம்பிக்கைக்கு உரிய வண்ணம் இனிதே
ஞான ஆட்சிமாற்றமாக என்னருளால் நடந்தேறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–